விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 14 வெள்ளி 28.05.2021 மலர் - 2, இதழ் - 52

# ஐ.எம்.ஏ. தலைவர் மீது கிரிமினல் வழக்கு

ஐ.எம்.ஏ தலைவர் டாக்டர் ஜான்ரோஸ் ஆஸ்டின் ஜெயலால் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ சங்கம் நாட்டின் மிகப்பெரிய மருத்துவ தொழில்முறை அமைப்பு. இது மதச்சார்பற்றதாகவும், அரசியல் சாராததாகவும் இருக்க வேண்டும் என்பது நியதி.

ஆனால், தமிழகத்தை சேர்ந்த தீவிர கிறிஸ்தவ மதவாதியான டாக்டர் ஜெயலால், கடந்த ஆண்டு அக்டோபரில் ஐ.எம்.ஏ தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஹக்காய் இன்டர்நேஷனலுக்கான ஒரு நேர்காணலில், 'தனது ஆன்மீக வாழ்க்கையை மீட்டெடுப்பதோடு, கிறிஸ்தவ நற்செய்தியை பரப்புவதற்காக அவரது இந்தப் பதவியை பயன்படுத்த இது ஒரு நல்ல வாய்ப்பு' என அவர் கூறியுள்ளார். 2018ல் நடைபெற்ற ஹக்காய் லீடர் அனுபவ கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். ஜெயலால் இதற்கு முன்னர் பலமுறை ஹிந்து மதம் மற்றும் பண்டைய பாரத நாகரிகத்தின் மீது தனது வெறுப்பை வெளிப்படுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுஷ் அமைச்சகத்தின் கூட்டு மருத்துவமுறை, ஆயுர்வேத மருத்துவர்கள் உரிய பயிற்சியுடன் அறுவை சிகிச்சை செய்வது உள்ளிட்ட யோசனைகளையும் அவர் நிராகரித்திருந்தார். மேலும், 'அவர்கள் அதை ஒரு தேசம், ஒரு மருத்துவ முறையாக மாற்ற விரும்புகிறார்கள். அடுத்து, அவர்கள் அதை ஒரு தேசம் ஒரு மதமாக மாற்றுவார்கள். இது சமஸ்கிருத மொழியை அடிப்படையாகக் கொண்டது, ஹிந்து பாரம்பரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. சமஸ்கிருத மொழியையும் ஹிந்துத்துவாவையும் மக்களின் மனதில் திணிக்கிறார்கள்.' என அரசு திட்டங்கள் குறித்து தவறாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், மதமாற்றம் செய்ததற்காக தனது அலுவலகத்தை தவறாக பயன்படுத்தியதற்காக ஜெயலால் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



# ஆவணமாகும் ஸ்ரீரங்கம் ஓலைச்சுவடிகள்

ஸ்ரீரங்கம் ஸ்ரீரெங்கநாதர் கோயில், 108 வைணவத் திருத்தலங்களுள் முதல் திருத்தலம். அந்த கோயிலில் உள்ள பழங்கால ஓலைச்சுவடிகள் அனைத்தையும் புகைப்படம் எடுத்து கணினியில் பதிவேற்றி ஆவணப்படுத்தும் பணிகளை ஹிந்து அறநிலையத்துறை மேற்கொண்டுள்ளது. இங்கு 100க்கும் மேற்பட்ட தலைப்புகளில் அமைந்த ஓலைச்சுவடிகள் இங்கு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த ஓலைச்சுவடிகளில் கோயில் பற்றிய வரலாறு, உற்சவங்கள், வழிபாட்டு முறைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் தெலுங்கு மொழியில் உள்ளது குறிப்பிடத்தக்கது.



# தயாநிதி, சேகர்பாபுவின் உண்மை முகம்

சட்டப்பேரவை தேர்தலில் துறைமுகம் தொகுதியில், பா.ஜ.க வேட்பாளர் வினோஜ் பி செல்வத்தை தோற்கடித்து வெற்றி பெற்றவர் தி.மு.கவின் சேகர் பாபு. ஹிந்து அறநிலையத்துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் இவர், தனது துறைமுகம் தொகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், 'நமக்கு ஓட்டு போடாதவர்களுக்கு ஏன் விழுந்து விழுந்து பாடுபடுகிறீர்கள் என தி.மு.க எம்.பி தயாநிதி மாறன் கூறினார்' என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும், வட இந்தியர்கள் அதிகமுள்ள அந்த பகுதியில் உள்ளவர்கள் பொருளாதார ரீதியாக வளர்ந்ததற்கு காரணம் பா.ஜ.க அல்ல, திராவிட கட்சிகள் தான். நீங்கள் எங்களுக்கு அளித்த வாக்குகள் 50, பாஜகவுக்கு 300 என பேசியுள்ளார்.

தான் அனைவருக்கும் பொதுவானவர் என்று இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி, பொறுப்பேற்று கொண்டிருப்பவர்கள்தான் சேகர் பாபுவும் தயாநிதி மாறனும். ஆனால் அவர்கள் இப்படி பேசியுள்ளது, இந்திய அரசியலமைப்பு சட்டப்படி எடுத்துக்கொண்ட பதவி பிராமணத்திற்கு எதிரான செயல். அதிகாரத்தில் இருப்பதால் செய்த வெளிப்படையான மிரட்டலே இது. முதலமைச்சர் ஸ்டாலின், தயாநிதி மாறனையும் சேகர் பாபுவையும் கண்டிக்கவேண்டும்' என பா.ஜ.கவினரும் பொதுமக்களும் அவரது இந்த பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.





# யுனஸ்கோ தமிழக கோயில் பட்டியல்

காஞ்சி வரதராஜ பெருமாள் கோயில் உள்ளிட்ட 11 கோயில்களுக்கு உலக பாரம்பரிய நினைவுச்சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள சுரகேஸ்வரர் கோயில், கைலாசநாதர், வைகுண்ட பெருமாள், முக்தீஸ்வரர், இறவாதீஸ்வரர், பிறவாதீஸ்வரர் கோயில்கள் மற்றும் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமி கோயில் உள்ளிட்ட 11 கோயில்கள் உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அங்கீகரிப்பதற்கான யுனெஸ்கோவின் தற்காலிக பட்டியலில் இடம் பெற்றுள்ளன.



# நிவாரணத்தொகை அறிவிப்பு



ஆண்டுதோறும் ஏப்ரல்15 முதல் ஜூன் 15ம் தேதி வரை மீன்களின் இனப்பெருக்க காலம் என்பதால், புதுச்சேரியில் மீன்பிடித் தடைக்கால நிவாரண நிதியாக ரூ. 5,500 வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார். மேலும், இந்த நிவாரணத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். 15,983 மீனவ குடும்பங்களுக்கு சுமார் 8.79 கோடி நிவாரணமாக வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், கொரோனா தொற்றின் இரண்டாவது அலை, ஊரடங்கு காரணங்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் புதுச்சேரி மக்களுக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில், அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் ரூ.3,000 வழங்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

# வாட்ஸ்அப்பின் கூற்று நிராகரிப்பு




புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கு எதிராக வாட்ஸ்அப், டெல்லி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இது குறித்து மத்திய அரசு ஒரு விளக்கத்தை வெளியிட்டது. அதில், 'பாரத அரசு முன்மொழிந்த நடவடிக்கைகள் எதுவும் வாட்ஸ்அப்பின் செயல்பாட்டை எந்த வகையிலும் பாதிக்காது, பயனர்களை பாதிக்காது. தனியுரிமையை அரசு மதிக்கிறது, அதை மீறும் எண்ணம் இல்லை. அதே சமயம், பாரதத்தின் இறையாண்மை, ஒருமைப்பாடு, தேசத்தின் பாதுகாப்பு தொடர்பான மிகக் கடுமையான குற்றங்களைத் தடுப்பதற்கும், விசாரிப்பதற்கும், தண்டிப்பதற்கும் சாட்சிகள் தேவைப்படும்போது மட்டுமே இத்தகைய தேவைகள் உள்ளன. தனியுரிமை உட்பட எந்தவொரு அடிப்படை உரிமையும் முழுமையானதல்ல. அது நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், சமூக ஊடக நிறுவனங்களில் சட்டரீதியான குறுக்கீட்டை அனுமதிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. பாரதம் கேட்பது மற்ற நாடுகள் கோரியதை விட மிகவும் குறைவுதான்.' என தெரிவித்துள்ளது.

# மின்சார கட்டண உத்தரவு



கொரோனா தடுப்பு நடவடிக்கையாக தளர்வுகளற்ற ஊரடங்கு தமிழகத்தில் அமலில் உள்ளது. இதனால், தாழ்வழுத்த மின்நுகர்வோர்கள் மின் கட்டணத்தை செலுத்த கால அவகாசத்தை நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டது. மேலும், சிறு, குறு தொழிற்சாலைகள் கூடுதல் வைப்புத் தொகை செலுத்த ஜூன் 15ம் தேதிவரை அவகாசம் நீட்டிக்கப்படுள்ளது. ஏப்ரல் மாத மின்கட்டணம் செலுத்தாத உயர் மின்னழுத்த மின் இணைப்புகளுக்கும் தாமதக் கட்டணத்துடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக, 10.05.21 முதல் 24.05.21 வரையிலான காலத்தில் (அதாவது முந்தைய மாத கணக்கீட்டில் இருந்து 60வது நாள் இந்த காலத்தில் இருப்பின்) மின் கணக்கீடு செலுத்த வேண்டிய தாழ்வழுத்த மின்நுகர்வோர்கள் மே 2019ம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட தொகையினையே கணக்கீட்டு தொகையாக கருதி செலுத்த வேண்டும். புதிய நுகர்வோர்கள் அல்லது அவ்வாறு இல்லாதவர்கள் மே 2021க்கான முந்தைய மாத கணக்கீட்டு பட்டியலின்படி, அதாவது மார்ச் 2021ன் கணக்கீட்டின் படி, மின்கட்டணம் செலுத்தலாம். இவ்வாறு செலுத்த வேண்டிய கட்டணம் பின்வரும் மாத கணக்கீட்டு மின்கட்டணத்தில் முறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# தாய் மொழியில் பொறியியல் படிப்புகள்

தமிழ், தெலுங்கு உட்பட எட்டு மொழிகளில் பொறியியல் படிப்புகளை நடத்துவதற்கு கல்லூரிகளுக்கு, அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, தமிழ், தெலுங்கு, ஹிந்தி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, வங்க மொழிகளில் 202021ம் ஆண்டு முதல் பொறியியல் பாடங்களை நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. மேலும், இளநிலை பட்டப்படிப்பை மேலும் 11 மொழிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. இதன் மூலம், கிராமப்புற மற்றும் பழங்குடியின மாணவர்கள் தாய் மொழியில் பொறியியல் படிக்கும் வாய்ப்புடன் அதனை எளிதாக புரிந்து கொள்ளவும் முடியும்.




# திருப்பதி நடைபாதை மூடல்



திருப்பதி அலிபிரி நடைபாதை வழியாக பக்தர்கள் திருமலைக்கு சென்று வருகின்றனர். இந்த நடைபாதையில் வெயிலிலிருந்து பாதுகாக்க மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகள் ஆனதால், மேற்கூரை பல இடங்களில் பழுதடைந்துள்ளது. அதை செப்பணிட்டு, சீரமைக்கும் பணியை ரிலையன்ஸ் நிறுவனம் ஏற்றுள்ளது. அதற்கான பணிகள் ஓராண்டாக நடந்து வருகிறது. தற்போது கொரோனா காரணமாக குறைவான பக்தர்களின் வருகையை பயன்படுத்தி, இந்த பணியை இரண்டு மாதத்திற்குள் நிறைவு செய்ய தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. அதேசமயம், நடைபாதை மார்கத்தில் செல்ல விரும்பும் பக்தர்கள் ஸ்ரீவாரி மெட்டு மார்கமாக திருமலைக்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# தமிழக அரசு மெத்தனம்

மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான செல்லூர் ராஜு வெளியிட்டுள்ள வீடியோவில் 'முன்னாள் முதல்வர் எடப்பாடி தலைமையிலான அரசு, கொரோனா முதல் அலையில் மிகத் தீவிரமாக இயங்கி மக்களை காப்பாற்றியது. வீடு வீடாகச் சென்று காய்ச்சல் கண்டறிந்து, கபசுரக் குடிநீர், சத்து மாத்திரைகள் வழங்கி கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. ஊரடங்கின்போது மக்களுக்கு காய்கறி பழவகைகளை வீட்டிற்கே நேரடியாக சென்று வழங்கியது. ஆனால் தற்போது தி.மு.க தலைமையிலான தமிழக அரசு, இத்தனை உயிர் பலிகளுக்கும் பிறகும் மெத்தனமாக செயல்படுகிறது. கடந்தமுறை



நாங்கள் ஊரடங்கு அறிவித்தபோது, மக்கள் இதன் பொருளாதாரச் சுமையை எப்படி தங்குவார்கள் என அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார். ஆனால் தற்போது அதற்கு நேர்மாறாக செயல்படுகிறார்' என குறிப்பிட்டுள்ளார்.

# சேவாபாரதியை குறிவைக்கும் கம்யூனிஸ்ட்கள்

நாட்டில் எப்பொழுதெல்லாம் பிரச்சனைகள், பேரிடர்கள் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் உடனடியாக களமிறங்கி மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை, ஜாதி, மத பேதமின்ற அனைவரும் நமது தேசத்தவர் என்ற கண்ணோட்டத்தில் செய்வது சேவாபாரதி. நம் தேசத்தில் மட்டுமல்ல, உலகின் பல பகுதிகளிலும் 'சேவா இண்டர்நேஷனல்' எனும் பெயரில் பல்வேறு தொண்டு பணிகள் செய்து வருகிறது சேவாபாரதி.

இந்த நிலையில், கேரளாவில் தொற்றுநோய் உள்ளிட்ட சிக்கலான காலகட்டங்களில் நிவாரண அமைப்பாக செயல்பட சேவா பாரதிக்கு வழங்கப்பட்ட அனுமதியை திரும்பப் பெற கண்ணூர் மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்கு, சேவா பாரதி தன்னார்வலர்கள் 'கட்சி சின்னங்களை' பயன்படுத்துகிறார்கள் என்று ஒரு பொய்யான ஒரு காரணத்தை கூறியுள்ளனர். அதே நேரத்தில், கண்ணூர் மாவட்ட நிர்வாகம், முஸ்லிம் லீக்கின் ஒரு பிரிவாக சி.எச். மையத்தை ஒரு நிவாரண நிறுவனமாக அறிவித்துள்ளது. கம்யூனிஸ்ட்டு கட்சி, முஸ்லீம் லீக், காங்கிரஸ் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்பினர்தான் எப்போதாவது நிவாரணப் பணிகளில் ஈடுபட்டால் அப்போது தங்கள் கட்சி சின்னங்களை தவறாமல் பயன்படுத்துகின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆளும் கம்யூனிச சி.பி.ஐ.எம்மின் பாசிசத் தன்மையை மக்களுக்கு அம்பலப்படுத்தும் ஒரு நிகழ்வாக இந்த சம்பவம் திகழ்கிறது.



# பா.ஜ.க. வின் மக்கள் தொண்டு தினம்

மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பாரதிய ஜனதா கட்சியின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவை, மக்களுக்கு தொண்டாற்றும் தினமாக கொண்டாட வேண்டும் என அக்கட்சியின் தமிழகத் தலைவர் எல்.முருகன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், 'தமிழகம் முழுவதும் இருக்கிற பா.ஜ.கவினர் அனைவரும் மக்களுக்கு சேவை செய்கிற தினமாக இந்த நாளைக் கொண்டாட வேண்டும். தடுப்பூசி விழிப்புணர்வு, ரத்ததான முகாம்கள், கொரோனா சிகிச்சை உதவிகள், முகக் கவசம், கபசுர குடிநீர் வழங்குவது, ஏழை மக்களுக்கு, உணவு பொருட்கள் வழங்குவது என பலவித சேவைகளை மேற்கொள்ள வேண்டும்' என கேட்டுக் கொண்டுள்ளார்.



# இதுதான் இவர்களின் மதச்சார்பின்மை



ராஜஸ்தானில் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் அரசு சமீபத்தில் ‘கோயில்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்த தடை’ என்ற ஒரு உத்தரவை பிறப்பித்துள்ளது. ஆனால் ஒரு நாளைக்கு ஐந்து முறை ஒலிபெருக்கிகளைப் பயன் படுத்துகின்ற மசூதிகளில், இதுபோன்ற எந்தவொரு தடையையும் காங்கிரஸ் அரசு விதிக்கவில்லை. இது குறித்து சங்கேனர் சட்டமன்ற உறுப்பினர், டாக்டர் அசோக் லஹோட்டி, மாநில அரசுக்கு ஒரு புகார் கடிதம் எழுதியுள்ளார். அதில், ‘அரசின் இந்த பாரபட்சமான கொள்கையால், மக்கள் கோபத்தில் உள்ளனர். ஒன்று ஒலிபெருக்கிகளை முழுமையாக தடை செய்யப்பட வேண்டும் அல்லது கோயில்களிலும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும்’ என்று கூறியுள்ளார்.

# அலைபேசியை திருடிய நர்ஸ்

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் ரெம்டெசிவிர் திருடுவதற்காக அந்த மருத்துவமனையில் பணிபுரியும் ருகையா என்ற செவிலியர், கொரோனாவால் இறந்துவிட்ட ஒரு நோயாளியின் அலைபேசியை திருடியுள்ளார். புகாரின் அடிப்படையில் அவரை கைது செய்து காவல்துறையினர் விசாரித்தனர். அப்போது, திருடியதை ஒப்புக்கொண்ட ருகையா, தனது நண்பர் சல்மானிடம் தொலைபேசியை ஒப்படைத்ததாக கூறினார். சல்மான் அகமதுவும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், மருத்துவமனையே இதனை செய்ய தன்னை அனுமதித்ததாகவும் ருகையா கூறியுள்ளார். ஆனால், மருத்துவமனை நிர்வாகம் அந்த குற்றச்சாட்டுகளை மறுத்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.



# இன்று ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம்

டில்லியில் 43வது ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டம் இன்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெறுகிறது. கொரோனா சூழல் காரணமாக இக்கூட்டம் வீடியோ கான்பரன்ஸ் மூலமாகநடைபெறும்.தமிழகம்சார்பில்இக்கூட்டத்தில்நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்கிறார். இக்கூட்டத்தில், ஜி.எஸ். டியில் பெட்ரோலிய பொருட்களை சேர்ப்பது, கொரோனா தடுப்பூசிகளுக்கு விதிக்கப்படும் 5 சதவீத ஜி.எஸ்.டி வரி ரத்து, கொரோனாவுக்கான மருந்துகள், ஆக்சிஜனனுக்கு வரிவிலக்கு அளிப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகள் விவாதிக்கப்படும் என தெரிகிறது.




# எளியோருக்கு உதவும் பிரதம மந்திரி காப்பீட்டுத் திட்டம்




'பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா' ஆயுள் காப்பீடு திட்டத்தில், எந்த ஒரு காரணத்தாலும் இறந்தவர்களுக்கு, 2 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது. ஒருமுறைவங்கியில்இதற்கானவிண்ணப்பத்தை சமர்ப்பித்தால், ஆண்டுதோறும் வங்கி கணக்கில் இருந்து, அதற்கான காப்பீட்டு பிரீமியம் ரூ. 330 தானாக எடுக்கப்படும். காப்பீடு செய்தவர் இறந்த 45 நாட்களுக்குள் குறிப்பிட்ட வங்கி கிளையில் விண்ணப்பத்தை சமர்ப்பித்து அவரது குடும்பத்தினர் காப்பீட்டு தொகையை பெறலாம். கொரோனா பாதிப்பால் இறந்தவரின் குடும்பத்துக்கும் இந்த காப்பீடு தொகை கிடைக்கும். 18 முதல் 50 வயதுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். 50 வயதுக்குள் இணைந்தவர்கள் அதனை 55 வயது வரை நீட்டித்துக் கொள்ளலாம். இதேபோல, 'பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா' என்ற விபத்துக்கான காப்பீட்டுத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் 18 முதல் 70 வயதுடையவர்கள் விபத்தில் இறந்தால், இரண்டு லட்சம் ரூபாய் காப்பீடு தொகையாக குடும்பத்திற்கு வழங்கப்படும்.

# கொரோனாவுக்கு பிறகான சிகிச்சை இலவசம்



உத்தர பிரதேசத்தில், கோவிட் 19 நோயாளிகளுக்கு ஒரு பெரிய நிவாரணமாக, மாநிலத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கொரோனாவுக்கு பிந்தைய சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படும் என உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். பல கொரோனா நோயாளிகள் கொரோனாவில் இருந்து மீண்ட பிறகும் அதற்குப் பிந்தைய சிகிச்சைக்காகவும் கொரோனா இல்லை என ஆர்டி பி.சி.ஆர் சான்று கிடைக்கும் வரையிலும் மருத்துவமனைகளில் தங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பொதுவான வார்டுகளில் தங்கியிருக்கும் அத்தகையோருக்கு இந்த உத்தரவு ஆறுதல் அளித்துள்ளது. உத்தரபிரதேச மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை இலவசம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

# சமூக சீர்திருத்தவாதி வீர சாவர்க்கர்



சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், நாடக ஆசிரியர், கவிஞர், வரலாற்றாசிரியர், அரசியல் தலைவர், தத்துவவாதி என பன்முகத்திறமைக் கொண்ட சுதந்திர போராட்ட வீரர்தான் விநாயக் தாமோதர் சாவர்க்கர் என்ற வீர சாவர்க்கர்.

ஜாதிய சிந்தனைகள் பலமாக இருந்த அக்காலத்திலேயே, ஜாதி அமைப்புகளை கடுமையாக எதிர்த்தவர் சாவர்க்கர். அனைத்து ஜாதியினரின் குழந்தைகள் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்காக கடுமையாகப் பணியாற்றினார். அவர்களின் பெற்றோருக்கு பண ஊக்கத்தொகை வழங்கவும் வலியுறுத்தினார். தசரா மற்றும் மகர சங்கராந்தி போன்ற பண்டிகைகளில் பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து, பாரம்பரிய இனிப்புகளை அனைவருக்கும் விநியோகிப்பார்.

அவரே ஒரு பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் குழந்தையை வளர்த்தார். பட்டியலின மக்களுக்கு காயத்ரி மந்திரத்தை படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுத்தார். அவர்கள் கோயில்களில் சமஸ்கிருத பாடல்களை ஓதவும், விஷ்ணு சிலைக்கு தங்கள் கைகளால் அபிஷேகம்செய்யவும் சாவர்க்கர் ஊக்குவித்தார்.

ரத்னகிரி சிறை வாழ்க்கையில், சாவர்க்கர் தனது ஒரு கட்டுரையை எழுதினார். அதில், ஹிந்துத்துவா என்பது எது, ஹிந்து என்பவர் யார்? என விவரித்துள்ளார். மேலும், அவர் ஹிந்து சமூக மற்றும் அரசியல் நனவின் தொலைநோக்கு பார்வையை ஊக்குவிக்கிறார்.

அவர் ஒரு ஹிந்துவை பாரத தேசத்தின் தேசபக்தர் என்று வர்ணிக்கிறார். ஹிந்து என்பவர் ஒரு மத அடையாளத்திற்கு அப்பாற்பட்டவர் என கூறும் சாவர்க்கர், ஹிந்துக்களை ஆரியராகவோ, திராவிடராகவோ வரையறுக்கவில்லை.

ஹிந்துக்களை, 'ஒரு பொதுவான தாய்நாட்டின் குழந்தைகளாக வாழும் மக்கள், ஒரு பொதுவான புனித நிலத்தை வணங்குகிறார்கள்' என்றே கூறியுள்ளார். ஹிந்து மதம், சமணம், புத்தம், சீக்கியம் உள்ளிட்ட அனைத்து மதங்களும் ஒன்றே என்று அவர் விவரித்துள்ளார். ஹிந்து ராஷ்டிரம் என்பது அகண்ட பாரதம் என்று தனது பார்வையை அந்த கட்டுரையில் கோடிட்டுக் காட்டியுள்ளார் சாவர்க்கர்.

பாரத சுதந்திரப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தவர் வீர சாவர்க்கர். ஆனால் சிலரால் இவரது பெயர் திட்டமிட்டே மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் வெளியானது. அவருடைய பிறந்த நாளான இன்று அவரது உண்மை வரலாற்றை அறிந்து போற்றுவோம்.

# மெஹூல் சோக்சி திருப்பியனுப்ப உறுதி

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ. 13,000 கோடி மோசடி செய்து, பா.ஜ.க ஆட்சியில் கைது செய்யப்படுவோம் என அறிந்த உடன் ஆன்டிகுவாவுக்கு தப்பிச்சென்ற மெஹுல் சோக்சி அங்கிருந்து சில நாட்கள் முன்பு காணாமல் போனார். அது குறித்து ஆன்டிகுவா & பார்புடா பிரதமர் காஸ்டன் பிரவுன் ஏ.என்.ஐக்கு அளித்த ஒரு பிரத்யேக பேட்டியில், ஆன்டிகுவா அவரை திரும்ப ஏற்றுக்கொள்ளாது. மீண்டும் அவர் இங்கு வந்தால் பாரத்துக்கு திருப்பி அனுப்ப உறுதி அளிக்கிறேன் என கூறியுள்ளார்.

